# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**கணிதம் - தரம் 02 / இரண்டாந் தவணை – வாரம் 11**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

**7.2 : நீளங்களை / உயரங்களை அளந்து நீளம் கூட , நீளம் குறைய என ஒப்பிடுவார்.**

( எதேச்சையான ஓர் அலகில் அளந்து ஒப்பிட வழிப்படுத்துக.)

I. பிள்ளையை முற்றத்தின் ஓர் இடத்தில் நிறுத்துக. கையில் பந்து ஒன்றைக் கொடுத்து, முடிந்தளவு தூரத்திற்கு வீசுமாறு கூறுக. பந்து விழுந்த இடத்தை அடையாளமிட்டுக் கொள்க. பின்பு ஒரு தடியை பிள்ளையிடம் கொடுங்கள். தூரத்தை அளந்து கூற வழிப்படுத்துங்கள். இன்னும் ஒருவரை அவ்வாறு பந்தை வீசி அடையாளமிட்டு, அதே அலகால் அளந்து யார் நீளம் கூட வீசியது, குறைவான தூரம் வீசியது யார் என வினாவுக.

II. சீவாத பென்சில் ஒன்றின் மூலம் கீழ்வரும் பொருட்களின் நீளம் எத்தனை என அளந்து கூற வழிப்படுத்துங்கள்.

1). மேசை ஒன்றின் நீளம் ............ பென்சில்கள்
2). கணிதப் புத்தகத்தின் நீளம் ............ பென்சில்கள்
3). யன்னலின் நீளம் ............... பென்சில்கள்
4). அறையின் நீளம் ............... பென்சில்கள்
5). கட்டிலின் நீளம் ................ பென்சில்கள்

III. சீவாத பென்சில் ஒன்றின் மூலம் பின்வரும் பொருட்களின் உயரத்தை அளந்து கூற வழிப்படுத்துங்கள்.

1). வீட்டின் கதவு ஒன்றின் உயரம் ............பென்சில்கள்
2). யன்னலின் உயரம் ............ பென்சில்கள்
3). கதிரை ஒன்றின் உயரம் ............பென்சில்கள்
4). அலுமாரியின் உயரம் ..............பென்சில்கள்
5). உங்களின் உயரம் ................பென்சில்கள்

IV. பானக்குழாய் (ஸ்ரோ) ஒன்றைக் கொண்டு மேற்கூறிய பொருட்களின் நீளம் உயரத்தினை அளந்து நீளம் கூட, நீளம் குறைய, உயரம் கூட, உயரம் குறைய என்பவற்றை ஒப்பிட்டுக் கூறுவதற்கு வழிப்படுத்துக.

- ❖ கணிதச் செயல்நூல் பக்கம் (36, 37, 38, 39) பயிற்சிகளை செய்துகாட்ட வழிப்படுத்துங்கள்.